# தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர்



## பதிப்புத்துறை வெளியீடுகள்

2017

## எண்ணப் பகிர்வு

'உலகெலாம் தமிழ் முழக்கம் செய்திடுவோம்' எனும் வகையில் தமிழின் பன்முகக் கூறுகளையும் ஆய்ந்தறிந்து தமிழுலகுக்கு வெளிப்படுத்துதல் எனும் முதன்மைக் குறிக்கோளினைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் பதிப்புத்துறை வாயிலாகப் பழந்தமிழ் இலக்கியங்களையும் அறிஞர்கள் ஆக்கிய ஆய்வுகளையும் வெளியிடுவதன் வழித் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. நூல்கள், களஞ்சியங்கள், அகராதிகள் எனத் தமிழின் பல்துறை சார்ந்த அரிய வெளியீடுகளைக் கொணர்வதன் மூலம் கலை, அறிவியல், இலக்கியம், இலக்கணம், தத்துவம் எனத் தமிழின் தனித்துவமிக்க கூறுகளையும், பண்பாட்டுக் களங்களையும் மக்களிடையே ஆழமாக அறியத் தருவதென்னும் தனித்தன்மை வாய்ந்த இலக்கினைக் கொண்ட செயன்மையினைத் தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறை நிகழ்த்தி வருவதென்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். பல புதிய ஆய்வு ஆக்கங்களைஅச்சிட்டு வெளியீடு செய்யும் அதே நேரத்தில் அரிய நூல்கள் பலவற்றின் மறுபதிப்பினையும் ஆக்கியளிக்கும் பணியும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதென்பது குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். அவ்வகையில் பொதுமக்களும் தமிழ் ஆர்வலர்களும் நூல்களை வாங்கிப் பயனுறும் வண்ணம் பதிப்புத்துறை இன்றளவில் வெளியீடு செய்துள்ள படைப்புக்களைப் பட்டியலிட்டு வெளியிடுவதில் தமிழ்ப் பல்கலைக்கழகம் பேருவகை எய்துகிறது.

முனைவர் **க.பாஸ்கரன்**
துணை வேந்தர்